# அய்யா நல்லகண்ணு மக்களுக்கான களப் போராளியாகத் திகழ்ந்தவர்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



போராட்டம். டெல்லியில் நடந்த போராட்டத்தையொட்டி, இந்தியா முழுவதும் இளைஞர்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆனால், நீட் எதிர்ப்புப் போராட்டம் என்பது, தமிழ்நாட்டுக்குப் புதிது கிடையாது. என்றைக்கு நீட் முதன்முதலாக வந்ததோ, அன்றிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்துக்கொண்டுதான் இருக்கிறது.

குறிப்பாக, எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பாக, நீட் தேர்வை ரத்துசெய்ய வேண்டும் என்று பல போராட்டங்களை நடத்தியுள்ளோம். நீட்டுக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்துள்ளோம். கையெழுத்து இயக்கம் நடத்தி, 80 லட்சம் கையெழுத்துகளைப் பெற்றோம். மோட்டார் சைக்கிள் பேரணி உள்பட நீட் ஒழிப்புக்காகப் பல்வேறு போராட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தியுள்ளது. அதுமட்டுமல்லாமல், 2021-ஆம் ஆண்டு, எங்கள் கழக அரசு அமைந்தவுடன், கழக அரசு சார்பாக நீட் பாதிப்பைக் கண்டறிய, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில், அப்போதைய முதலமைச்சர், நமது தலைவர் அவர்கள் ஒரு கமிட்டியும் அமைத்தார். அந்த கமிட்டி, தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்களைச் சந்தித்து, ஒரு பரிந்துரையை அரசிடம் கொடுத்தார்கள். அந்தப் பரிந்துரையின் அடிப்படையில், நீட் விலக்கு வேண்டும் என்று ஒரு சட்ட முன்வடிவை எங்கள் கழகத் தலைவர், அப்போதைய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்தார்கள்.

### இனிதான் போராட்டம்!

அதற்கு, ஆளுநர் ஒப்புதல் கொடுக்கவில்லை. உடனே உச்ச நீதிமன்றம் வரை போய்ப் போராடிய இயக்கம், திராவிட முன்னேற்றக்கழகம். டெல்லியில் நீட் குளறுபடிக்கு எதிராக நடந்த மாணவர்கள் போராட்டம் முடிந்துவிட்டது என்று நான் நினைக்கவில்லை. இனிமேல்தான் அந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்போகிறது என்பதுதான் என் எண்ணம். நீட்டை முற்றிலும் ஒழிப்பதற்கான தொடக்கமாகத்தான், நான் அந்தப் போராட்டத்தைப் பார்க்கிறேன்.

அய்யா நல்லகண்ணு அவர்கள் இன்று இருந்திருந்தால், அவரும் இதைத்தான் நிச்சயம் சொல்லியிருப்பார். அய்யா நல்லகண்ணு அவர்கள் எந்த அளவுக்கு எளிமைக்குச் சொந்தக்காரரோ, அதே அளவுக்குப் போராட்டக் குணத்துக்கும் சொந்தக்காரர். அப்படிப்பட்ட அய்யா நல்லகண்ணு அவர்களின் சிலையைத் திறந்து வைப்பதை என்னுடைய வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன்.

இங்கு, தோழர் பகு அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார், இந்த நிகழ்ச்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர், இளைஞர் அணிச் செயலாளர் வருகிறார், தோழர் வீரபாண்டியன் அவர்களும் வருகிறார் என்பதால், பல்வேறு இடங்களில் இருந்து தொலைபேசி அழைப்புகள், விசாரிப்புகள் என்று அவர் நாசூக்காகச் சொன்னார். ஆனால் வந்தவுடன் என்னிடம் வெளிப்படையாகவே சொன்னார், 'நிறைய பேர் போன் செய்து கேட்டார்கள். சார், நாளைய நிகழ்ச்சியில் குதிரை பேரம் நடத்துகிறீர்களா?' என்று. உண்மையாகவே குதிரை பேரம் எங்கு நடக்கிறது என்று, என்னைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

### ஓரணியில் களத்தில் நிற்கும்!

தோழர் வீரபாண்டியன் அவர்கள் இங்கு வந்தவுடன் என்னுடன் பேசிக்கொண்டு இருந்தார். தலைவர், உங்கள் தந்தையார் எப்படி இருக்கிறார் என்று கேட்டார். எப்போதும்போல அதே தோழமை உணர்வோடுதான் அவர் இங்கே அமர்ந்துள்ளார் என்று நம்புகிறேன். ஏனெனில், தமிழ் – தமிழர் – தமிழ்நாட்டு உரிமைக்கு எதிராக என்ன நடந்தாலும், திராவிட இயக்கமும் பொதுவுடைமை இயக்கமும் என்றைக்கும் ஓரணியில் கைகோர்த்துக் களத்தில் நிற்கும்.

டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். "நான் மட்டும் பெரியாரைச் சந்திக்காமல் இருந்திருந்தால், நிச்சயம் கம்யூனிஸ்ட் காரனாகத்தான் இருந்திருப்பேன்" என்று சொல்வார். அந்த அளவுக்கு கம்யூனிஸ்ட்டுகள் மேல் கலைஞர் அவர்களுக்குத் தனிப்பாசம் உண்டு.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 2016 சட்டமன்றத் தேர்தலின் போது, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். வெறும் ஒரு சதவிகித வாக்கு வித்தியாசத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர்ந்தது. அப்போது பத்திரிகையாளர்கள் சென்று கலைஞரிடம் கேட்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரவில்லை என்ற வருத்தம் அவர் மனதில் இல்லை. அப்போது அவர், 'தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத ஒரு சட்டசபை அமைந்திருக்கிறது என்பதுதான் எனக்கு வருத்தம்' என்று குறிப்பிட்டுப் பேசினார்.

அந்த அளவுக்கு, கம்யூனிஸ்ட்டுகள் மேல் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தனிப் பாசம் இருந்தது. குறிப்பாக, அய்யா நல்லகண்ணு, பெரியவர் சங்கரய்யா போன்றவர்கள் மீது கலைஞர் அவர்கள் வைத்திருந்த அன்பு மிகப்பெரியது. ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவர்கள் சொல்லும் கருத்துகளைக் கேட்டு, அதை நடைமுறைப்படுத்தியவர்தான் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் வழியில், கம்யூனிஸ்ட்டுகள்மீது எங்கள் கழகத் தலைவர் அவர்களும் தனி மரியாதை வைத்திருந்தார்கள். அய்யா நல்லகண்ணு அவர்களை அடிக்கடி சந்திப்பதை வழக்கமாக வைத்திருந்தவர், எங்கள் தலைவர் அவர்கள். குறிப்பாக, நல்லகண்ணு அய்யாவின் பிறந்தநாள் அன்று, என்ன வேலை இருந்தாலும் முதலில் அவர் வீட்டுக்குச் சென்று, அவரின் வாழ்த்தைப் பெறக்கூடியவர் எங்கள் தலைவர் என்பதை யாராலும் மறுத்துவிட முடியாது.

அய்யா நல்லகண்ணு அவர்களுக்கு, தமிழ்நாடு அரசின் மிக உயரிய விருதான 'தகைசால் தமிழர்' விருதையும் வழங்கிப் பெருமைப்படுத்தியவர், எங்கள் தலைவர் அவர்கள். நல்லகண்ணு அய்யா அவர்கள் மறைந்தபோது, அவருக்கு முழு அரசு மரியாதையையும் கொடுத்தவர் எங்கள் தலைவர் அவர்கள். பாலன் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அய்யா நல்லகண்ணு அவர்களின் உடலுக்கு அப்போதைய முதலமைச்சராக இருந்த எங்கள் கழகத் தலைவர் அவர்கள், உணர்ச்சிப்பெருக்குடன் வீரவணக்கம் செலுத்திய காட்சியை நிச்சயம் யாராலும் மறந்திருக்க முடியாது.

நானும் அய்யா நல்லகண்ணு அவர்களைப் பலமுறை சந்தித்துள்ளேன். 2021-ஆம் ஆண்டு, நான் சட்டமன்ற உறுப்பினர் ஆனதும், முதலில் சென்று வாழ்த்துப் பெற்றது அய்யா நல்லகண்ணு அவர்களிடத்தில்தான். அவரை யார் சந்திக்கச் சென்றாலும் பரிசாக, அவர் புத்தகங்கள் கொடுப்பார். நான் அவரைச் சந்திக்கச் செல்லும்போது, புத்தகங்கள் கொடுத்தேன். அவரும் என்னுடன் புத்தகங்களைப் பரிமாறிக்கொண்டார். நிறைய அரசியல் பேசுவார். பல அறிவுரைகளையும் சொல்லியிருக்கிறார்.

அதேபோல இங்கே, தோழர் பகுவின் 'அம்மாச்சி – கற்பனையின் முதல் ஆசிரியர்' புத்தகத்தை வெளியிட்டுள்ளோம்.

ஒரு புத்தகத்தைக் கொண்டுவருவது சாதாரண விஷயம் அல்ல. தி.மு.க. இளைஞர் அணி சார்பாக நாங்கள் ஒரு பதிப்பகம் நடத்திவருகிறோம். நான்தான் அதற்குப் பதிப்பாளர். அந்த வகையில் ஒரு பதிப்பாளராகவும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதைப் பெருமையாகக் கருதுகிறேன். தோழர் பகு, இந்தப் புத்தகத்திற்காக நிறைய உழைத்துள்ளார். திணை நில வாசிகளுக்கும் கழக இளைஞர் அணிக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு.

கழக இளைஞர் அணி நடத்தும் ஒவ்வொரு விழாவிலும் திணை நில வாசிகளின் பங்களிப்பு இருக்கும். அது சிறிய நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பெரிய பெரிய மாநாடுகளாக இருந்தாலும் சரி, அதில் நடக்கும் முதல் நிகழ்ச்சியே திணை நில வாசிகளின் கலை நிகழ்ச்சியாகத்தான் இருக்கும். தோழர் பகு, ஒரு சிறந்த எழுத்தாளர், நாடக இயக்குநர், பயிற்சியாளர் மற்றும் மக்களின் உரிமைக்கான குரலாக இருப்பவர். எனக்கு அவரிடம் மிகவும் பிடித்த விஷயம், தமிழ்நாடு முழுக்கப் பயணம்செய்து, குழந்தைகள், பெரியவர்கள், மலைவாழ் மக்கள் என நிறைய பேருக்கு நாடகக்கலை சம்பந்தமான பயிற்சிகளைத் தொடர்ந்து சிறப்பாகக் கொடுத்து வருகிறார்.

அந்த அனுபவங்களை எல்லாம் இந்தப் புத்தகத்தில் தோழர் பகு அவர்கள் விரிவாகச் சொல்லியுள்ளார். இந்தப் புத்தகம், பல ஆயிரம் பிரதிகள் விற்க என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அய்யா நல்லகண்ணு அவர்களின் புகழ் ஓங்கட்டும்! உதவும் கைகள் அறக்கட்டளை, தோழர் பகு உள்ளிட்ட திணை நிலவாசிகள் அமைப்பைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை வழங்கினார்.

### பங்கேற்றவர்கள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் மு.வீரபாண்டியன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலளார் ஆர்.டி.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரீம்ஸ் மூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான எபினேசர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் கழகச் செயலாளர் வெங்கடேசன், பகுதி கழக நிர்வாகிகள் இளைய அருணா, கருணாநிதி, நரேந்திரன், மருது கணேஷ், பகுதி கழகச் செயலாளர்கள் லட்சுமணன், ஜெபதாஸ் பாண்டியன், ஜெயராமன், முருகன், சுரேஷ், செந்தில்குமார், நேதாஜி கணேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பொன் இளவரசன், கௌதமன், மதன், ரவிக்குமார், சத்தியநாராயணன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, மருத்துவர் சுபேர்கான், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஹரிஷ், கார்த்தி, எழுத்தாளர்கள் சுகுணா திவாகர், பாலைவன லாந்தர், காயத்ரி, சுப்புலட்சுமி, வட்டக் கழகச் செயலாளர் தமிழ்ச்செல்வன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்களால் பாதிப்புக்கு உள்ளாகும்

# தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்க ஒன்றிய அரசு வகுத்துள்ள திட்டங்கள் எவை?

## மக்களவையில் — தயாநிதி மாறன் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 31-*

*பணவீக்கம் உள்ளிட்ட பிரச்சனைகளால் வர்த்தக துறையில் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீது ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்து ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா என்றும் தற்போது நிலவும் பொருளாதாரச் சவால்களை சமாளிக்க திட்டங்கள் ஏதும் வகுக்கப்பட்டுள்ளதா என்றும் நாடாளு மன்றத்தில் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.*



*அதன் விவரங்கள் பின் வருமாறு: -*

*தொடர்ந்து நிலவும் அதிக பணவீக்கம், மந்தமான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புச் சவால்கள் மற்றும் உலகளாவிய புவிசார் அரசியல் இடையூறுகள் ஆகியவை உற்பத்தித் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீது ஏற்படுத்தியுள்ள பாதிப்பை அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?*

*ஒன்றிய அரசின் சமீபத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் திட்டங்கள் உட்பட, அரசு மேற்கொண்ட நிதி, வரி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான நடவடிக்கைகளின் செயல்திறன் குறித்து ஏதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதன் முடிவுகள் என்ன?*

*அதிகரித்து வரும் உற்பத்திச் செலவுகள், உலகளாவிய எரிசக்தி விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் பணவீக்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பாதிப்பிலிருந்து சிறு தொழில் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களை (Startups) பாதுகாப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?*

*மூலதன வெளியேற்றம் (Capital Outflows), தனியார் முதலீட்டின் மந்தநிலை மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் நிலவும் நிச்சயமற்ற சூழல் ஆகியவை பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பில், குறிப்பாக தமிழ்நாடு போன்ற ஏற்றுமதி சார்ந்த மாநிலங்களில் ஏற்படுத்திய தாக்கத்தை அரசு மதிப்பீடு செய்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?*

*தற்போது நிலவும் பொருளாதாரச் சவால்களை எதிர்கொண்டு, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், தரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், உள்நாட்டு தேவையை (Domestic Demand) வலுப்படுத்தவும் அரசு முன்மொழிந்துள்ள திருத்த நடவடிக்கைகள் என்ன?*

*இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.*

---


ஏழை, எளிய மாணவர்களின்

# மருத்துவக் கனவைச் சிதைக்க நீங்கள் யார்?

## அமைச்சர் நிர்மல் குமார் பேச்சுக்கு — தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

*சென்னை, ஜூலை 31 -*

*ஏழை மற்றும் எளிய மக்களின் குழந்தைகள் மருத்துவராகக் கூடாது என்பதுதான் உங்கள் நோக்கமா? 4 ஆண்டுகள் படித்து மருத்துவர் ஆக நினைக்கும் மாணவர்களிடம் கார்பெண்டர், பிளம்பர் வேலை பாருங்கள் என்று அறிவுரை சொல்ல நீங்கள் யார்? ஒரு மாணவனின் உயரிய கனவை மட்டம் தட்டுவது எந்த வகையான வழிகாட்டுதல்?*



*திறமையை வளர்த்துக்கொள்ள ஊக்கப்படுத்துவதா அல்லது கனவையே கைவிடச் சொல்வதா? கடின உழைப்பால் முன்னேறத் துடிக்கும் ஏழை மாணவர்களைப் பார்த்து உனக்கு மருத்துவம் வேண்டாம் என்று சொல்வதற்குப் பதிலாக, அவர்களுக்கான கல்வி வாய்ப்புகளையும் நல்ல சூழலையும் உருவாக்க வேண்டியதுதானே அரசின் பொறுப்பு? முதலில் அந்த வேலையைப் பாருங்கள்.*

*மாணவர்களுக்கு வழிகாட்டுகிறேன் என்ற பெயரில், அவர்களின் எதிர்காலக் கனவுகளையே முடக்கும் பேச்சு இது. நீட் தேர்வு வேண்டாம், வேறு வேலை பார் என்று சொல்வது மாணவர்களின் கடின உழைப்பையும் சமூக நீதியையும் அவமதிக்கும் செயல்!*


*மாணவர்களின் உழைப்பைக் கேலி செய்வதையும், அவர்களின் மருத்துவக் கனவை முடக்குவதையும் நிறுத்துங்கள். இனியாவது சங்கி எண்ணங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு, மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஊக்கம் அளிக்கப் பாருங்கள்!*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. தங்கபாண்டியன்

### ஜூலை 31 (1997)



**தென்பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருமுறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கலைஞர் அமைச்சரவையில் 1996ஆம் ஆண்டு கூட்டுறவு – வணிகவரித்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.**

**காரியாப்பட்டி ஒன்றியப் பெருந்தலைவர், மல்லாங்கிணறு பேரூராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**"மாவட்டச் செயலாளர் பணியில் வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**